# நாச்சீயாதிவு பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் கலப்பு திருமண நடைமுறைகள்

## Mixed Marriage Practice in Muslim Family - A Study Based on Nachchaduwa Division

M.F.F. Hifra[1] & S.M.M. Nafees[2]

[1]B.A Honors Degree Holder in Islamic Law at South Eastern University of Sri Lanka
[2]Senior Lecturer, Department of Islamic Studies and Arabic language, SEUSL
hifrafarooque@gmail.com, smmnafees@.seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

திருமணம் பொதுவாக ஒவ்வொரு சம்பிரதாய அடிப்படையில் இடம்பெறுகின்ற அதே சமயம் மாறுபட்ட தன்மையிலும் அமைகிறது. இன, மத வேறுபாடுகளையும் தாண்டி கலப்பு திருமணம் இடம்பெறுகிறது. அதற்கமைய நாச்சியாதீவு முஸ்லிம் குடும்பங்களில் நிலவும் கலப்பு திருமண நடைமுறைகளை பரிசீலிப்பது இவ்வாய்வின் நோக்கமாகும். பண்புசார் ஆய்வு முறையில் அமைந்த இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத்தரவுகளாக கலப்பு திருமணம் செய்த 50 பேர்களிடம் கலப்பு திருமண நடைமுறை சார்ந்த வினாக்கள் அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாயப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வு கட்டுரைகள், இணையத்தள ஆக்கங்கள் என்பவற்றின் மூலம் திரட்டப்பட்டுள்ளன. கலப்பு திருமணம் இஸ்லாமிய திருமண முறைகளில் இருந்து வேறுபடக் கூடியதாக அமைவதோடு, இஸ்லாம் வழங்கிய போதனை அடிப்படையில் இத்திருமணம் இடம்பெறுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்த முன்மொழிவாகவும், மேலும் எதிர் காலத்தில் மாணவர்கள், ஆய்வாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் பயன்பெறும் வகையிலும், இத்திருமண நடைமுறைகளுக்கமைய ஆலோசனைகளை முன்வைப்பதிலும் இவ்வாய்வு அமையவல்லது.

திறவுச்சொற்கள்: கலப்பு திருமணம், திருமண நடமுறைகள், முஸ்லிம் குடும்பம்

**அறிமுகம்**

திருமணம் என்பது இரண்டு நபர்களுக்கிடையிலான உறவாக மாத்திரமல்லாது பல்வேறபட்ட சமூகங்கள், பல்வேறுபட்ட காலங்கள், ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கிடையிலான பிணைப்புக்களாகவும், வணிக உறவுகளின் பகுதியாகவும், ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தக்கூடிய சமூகம் அங்கிகரிக்ககூடிய ஒரு ஒப்பந்தமாகும். (Constable, N. 2005) கலப்பு திருமணம் என்பது வெவ்வேறான இனங்களுக்கிடையில் அல்லது மதங்களுக்கிடையிலான திருமணமாகவும் மதம், இனம், சாதி, என்ற வேறுபாடின்றி ஆணும் பெண்ணும் தத்தமது விருப்பின்படி மேற்கொள்ளும் திருமண முறையாகவும் கருதப்படுகிறது. (maznah mohammad, 2009)

இஸ்லாம் அனுமதித்துள்ள திருமண சட்ட விதிகளையும் அதன் முக்கியத்துவத்தையும், இஸ்லாம் வலியுறுத்தும் திருமண ஒழுக்கங்கள் மற்றும் திருமண

சம்பிரதாய முறைகள் போன்றவற்றை அல்குர்ஆன், ஸுன்னா மூலம் தெளிவாக அறியலாம். (huzain meraj.I, 2018) விசுவாசிகளே! (அல்லாஹ்வுக்கு) இணைவைக்கும் பெண்களை, அவர்கள் விசுவாசம் கொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்யாதீர்கள், (ஏனென்றால்) இணைவைக்கும் ஒரு பெண்ணை விட அவள் உங்களைக் கவரக்கூடியவளாக இருப்பினும், விசுவாசியான ஓர் அடிமைப் பெண் மிகச் சிறந்தவளாவாள்: மேலும், இணைவைக்கும் ஆண்கள் விசுவாசம் கொள்ளும் வரை அவர்களுக்கு விசுவாசியான பெண்களை திருமணம் செய்து கொடுக்காதீர்கள். இணைவைக்கும் ஒரு ஆணைவிட அவன் உங்களைக் கவரக்கூடிவனாக இருப்பினும் ஒரு விசுவாசியான அடிமை மிகச் சிறந்தவனாவான். (ஸுரா பகரா: 221)

இஸ்லாமிய சட்டங்கள் பிரயோகிக்கும் நாடுகளில் மதத்துக்கு மாற்றமான முறையில் திருமணம் இடம்பெற்றால் சிவில் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தபடுகிறது. (Chee Herig Leng, Gavin W. Jones and Maznah Mohamad 2009) இந்தியா, ஆப்கானிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா, அல்ஜீரியா போன்ற நாடுகளில் முஸ்லிம் ஆண்களை வேதம் கொடுக்கபட்டவர்களை திருமணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள் முஸ்லிம் பெண்கள் முஸ்லிமல்லாதவர்களை திருமணம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ், ஈராக், இஸ்ரேல், பாக்கிஸ்தான் சவூதி அரேபியா போன்ற நாடுகளில் திருமணம் உள்ளிட்ட குடும்பச் சட்டம் தத்தமது மதத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்படுகிறது. முஸ்லிம்களை நிர்வகிக்கும் திருமணச் சட்டங்கள் பெரும்பாலும் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத திருமணங்களை தடைசெய்கின்றன. (www.loc.gov)

1951 ஆண்டின் முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் முஸ்லிம் தனியார் சட்டம் முஸ்லிம்களுக்கு இடையிலான திருமணங்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படுகிறது. (s.2 of the Act) முஸ்லிம் ஆண் ஒருவருக்கும் முஸ்லிம் அல்லாத பெண்ணுக்கும் இடையில் செய்து கொள்ளப்படுகிற திருமணம் சட்ட முரணானதாகும். (B.R.Verma,1988 ). முஸ்லிம் ஆண் வேதங்களை பின்பற்றுகின்ற வேறுபட்ட நம்பிக்கையுள்ள ஒரு பெண்ணை ஒரு முஸ்லிம் ஆண் திருமணம் செய்ய முடியும். ( Ibid at pp. 176-177). மேலும் கச்சிமுகமது எதிர் பெனடிட் வழக்கில் ஏற்கனவே திருமணமான இஸ்லாமியரொருவர் பொதுச் சட்டத்தின் கீழ் இஸ்லாமியரல்லாத பெண்ணை திருமணம் செய்தால் அத்திருமணம் வலிதற்றதாகும் எனக் கூறப்பட்டது.(63 N.L.R.505)

பொதுச்சட்டத்தின் கீழ் திருமணம் செய்த ஆணொருவர் இஸ்லாமிய மதத்தை தழுவி இரண்டாவது திருமணம் செய்தமை வலிதானது என Reid vs AG xxviii வழக்கு தீர்க்கப்பட்டது. (1986 2 SLR 190). Abeysundera V. Abeysundera வழக்கில் பொதுச் சட்டத்தின் கீழ் முதல் திருமணம் நிலைத்திருக்கும் போது இஸ்லாமிய மதத்தை தழுவி இரண்டாவது திருமணம் புரியப்படுமாயின் அது வெற்றும் வெறிதானதென நீதிமன்றம் விளம்பியது. இவ்வழக்கில் ஒருவர் வெறுமனே திருமணம் செய்யும் நோக்கத்திற்காக மட்டும் மதம்மாறி உள்ளமையால் இருதாரக் குற்றம்புரிந்தார் என்ற

அடிப்படையில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டது. (supra 16 , section – 3(1)(b). கலப்பு திருமணம் எத்தனிக்கின்ற சட்டங்களை இவ்வழக்குகள் பறைகிறது. இலங்கையின் அரசியலமைப்பானது ஒருவர் தான் விரும்பும் மதத்தை பின்பற்றும் சுதந்திரத்தை அடிப்படை உரிமையாக ஏற்று அங்கீகரித்துள்ளது. ஒருவரின் மதச் சுதந்திரத்தின் விளைவாக ஒருவருக்கு கிடைக்கின்ற உரிமைகள், சலுகைகள் மட்டுப்படத்தப்பட்டுள்ளன என்ற மற்றுமொரு கோணத்திலும் இவ்வழக்குத் தீாப்பானது அவதானிக்கத்தக்கது.(சூளனி, 2009)

கலப்பு திருமணம் தொடர்பிலான குறிப்பிட்ட ஆய்வுகள் இடம்பெற்ற போதிலும் இலங்கையில் முஸ்லிம் சமூகத்தில் கலப்பு திருமணம் தொடர்பிலான ஆய்வுகள் அரிதாக உள்ளதோடு, அவற்றில் W.A.Fazila (2013) என்பவரால் எழுதப்பட்ட ‘கொட்டியாக்கும்புற முஸ்லிம்களிடையே நிலவும் கலப்புத் திருமணங்கள்’ எனும் ஆய்வுக்கட்டுரை திருமணத்திற்கான காரணங்களைக் கண்டிறிதல், அவ்வாறான திருமணம் இடம்பெறாமல் இருப்பதற்கான ஆலோசனைகளை முன்வைக்கும் முகமாக அமைகின்றது. மேலும் இலங்கையில் கலப்பு திருமண நடை முறைகள் தொடர்பான ஆய்வுகள் இடம்பெறவில்லை. அவ்விடைவெளியை நிவர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வு அமைகிறது.

அனுராதபுர மாவட்டத்தில் 19 கிராமசேவகர் பிரிவுகளை கொண்ட நாச்சியாதீவு பிரதேசத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக கொண்ட 4 கிராமசேவகர் பிரிவையும், சிங்கள மக்கள் பெரும்பான்மையாகக் கொண்ட 15 கிராமசேவகா் பிரிவுகளையும் கொண்டது. 2018 ஆம் ஆண்டின் குடித்தொகை கணெக்கெடுப்பின்படி 19 கிராம சேவகப்பிரிவிற்கு உட்பட்ட 30728 பேர்களைக்கொண்ட 8833 குடும்பங்கள் உள்ளன. (நாச்சியாதீவு பிரதேச செயலக அறிக்கை- 2018) இப்பிரசேத்தில் இடம்பெறும் கலப்புதிருமண நடைமுறைகளை பரிசீலித்து பகுப்பாயவும், இவை தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும் இவ்வாய்வு விளைகிறது.

**ஆய்வு நோக்கம்**

நாச்சியாதீவில் இடம்பெறும் கலப்புதிருமண நடைமுறைகளை பரிசீலித்து, ஆலோசனைகளை முன்வைத்தல்.

**ஆய்வு முறை**

இந்த ஆய்வானது பண்புரீதியான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்குரிய தகவல்களாக முதலாம் நிலைத்தரவுகளாக நாச்சியாதீவு பிரதேசத்தில் வாழக்கூடிய முஸ்லிம் குடும்பங்களில் கிடைக்கக் கூடிய மாதிரிகளில் இருந்து கலப்பு திருமணம் செய்த 50 பேர் தெரிவு செய்யப்பட்டு, முறை சாரா நேர்காணல் முறைகுட்படுத்தப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. முஸ்லிம்கள் வாழக்கூடிய 5 கிராம சேவகர் பிரிவுகளான நாச்சியாதீவு, நாச்சியாதீவு புதிய நகர், குடா நெளுபாவ, மஹா நெளுபாவ, சிராவஸ்திபுர, கிராமங்களில் நேர்காணல்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நாச்சியாதீவு பிரதேச செயலக அறிக்கை, கலப்பு திருமணம் தொடர்பில் வெளிவந்துள்ள ஆய்வுக்

கட்டுரைகள், இணையத்தள வெளியீடுகள், போன்றன மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவை ஆய்வுக்கான கோட்பாட்டு ரீதியான விளக்கங்களை பெற்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கலந்துரையாடல்களும் கண்டுபிடிப்புக்களும்**

**கலப்பு திருமண நடைமுறைகள்**

நாச்சியாதீவு பிரதேசத்தில் கலப்பு திருமணம் இடம்பெறும் நடைமுறைகளை அவதானிக்கும் போது பொதுவாக முஸ்லிம் சமூகத்தில் இடம்பெறும் திருமண நடைமுறைகளுக்கு மாற்றமான நிலையினைக் கொண்டுள்ளது.

**திருமணத் தெரிவுமுறை**

மனித வாழ்வில் சிறந்த குடும்பத்தை கட்டியெழுப்புவதில் திருமணம் பாரிய பங்களிப்பை கொண்டுள்ளது எனலாம். திருமண நடைமுறையில் சமயம் சார்ந்த விழுமியங்களுடன் இடம்பெறுவதை எல்லா மதங்களும் ஆதரிக்கின்ற அதே சமயம் திருமணத்தின் துணை தெரிவானது இருபாலாருக்கும் சம உரிமை வழங்கியுள்ளது. இருப்பினும் துணை தெரிவு சில விதிமுறைகளுக்கு உட்பட்டும், மீறியும் இடம்பெறுகிறது. திருமண தெரிவு தொடர்பான தரவுகள் பெறப்பட்டமைக்கமய நாச்சியாதீவு பிரதேசத்தில் திருமண தெரிவுமுறையாக பெற்றோரினால் தீர்மானித்தும் பிள்ளைகளின் சம்மதத்துடன் இடம்பெறும் திருமணமும், பிள்ளைகளின் விருப்பத்தினால் இடம்பெறும் திருமண முறைகளையும் அவதானிக்க முடிகின்றது.

இவர்களில் பெற்றோர்களின் விருப்பதில் திருமணம் செய்தவர்களில் ஆண்களை விட பெண்கள் அதிகமானவர்களாகவும், மற்றும் பெண்களை விட அதிகமாக ஆண்களே (29 பேர்) சுய விருப்பத்தில் துணையை தெரிவு செய்துள்ளனர். இவர்களில் அதிகமானோர் திருமணத்தின் போது வலீமா விருந்தினை கொடுத்திருக்கவில்லை. ஆரம்பத்தில் தத்தமது குடும்ப விருப்பமின்றி திருமணம் இடம்பெற்றமையும், மற்றும் துணைவியர்களது குடும்ப பின்னணி மாற்று மதத்தவர்களாக இருந்தமையும் பிரதான காரணமாக தெரிகின்றது. மேலும் இஸ்லாத்தை ஏற்ற ஆண்களில் வலீமா விருந்து கொடுத்த அனைவரும் திருமணத்திற்கு முன் இஸ்லாத்தை ஏற்று குடும்ப சம்மதத்துடன் திருமணம் செய்துள்ளனர். சுய விருப்பில் திருமணம் செய்த பெண்களில் ( 7 பேர் ) மாற்று மதத்தின் திருமண முறைப்படி திருமணம் செய்துள்ளதோடு, இஸ்லாத்தை விட்டும் வெளியேறி உள்ளனர்.

திருமணத் தெரிவினை பிரதேச அடிப்படையில் அவதானிக்கையில் அதிகமானோர் (32 பேர்) நாச்சியாதீவினை பூர்விகமாக கொண்டவர்கள் கலப்பு திருமணத்தினை மேற்கொண்டுள்ளனர். பெரும்பான்மையினர் சிங்களம் பேசும் கிறிஸ்தவர்களையும், சிங்களவர்களையும் திருமணம் செய்தவர்களாக அறியகூடியதாகவும், 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது மன்னார், முல்லைத்தீவு, யாழ்பாணம், போன்ற இடங்களில் இருந்து நாச்சியாதீவிற்கு குடியேறியவர்களில் கலப்பு

திருமணம் செய்து கொண்ட அதிகமானவர்கள் தமிழ் பேசும் கிறிஸ்தவர்களாகவும், தமிழர்களாகவும் உள்ளனர்.

**திருமணத்தின் பின்னணி**

திருமணம் இடம்பெறுவதற்கு குடும்ப, சமூக, காரணிகள் இக்கலப்பு திருமண நடைமுறைகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. இரண்டாம் தார திருமணம் செய்தவர்களை விட முதல் திருமணம் செய்தவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். அவர்களில் பெண்களை விட ஆண்கள் (26 பேர்) அதிகமானவர்கள்.

முதல் தாரமான திருமணத்திற்கான பின்னணிகளாக பின்வருவனவற்றை அடையாளம் காணமுடிகின்றது. தொழில் செய்யும் இடங்களின் நட்பு கொள்வதன் பின்னணியில், திருமணம் செய்து கொள்ள இருவரும் இணக்கப்படுதல். மேலும், முகநூல், மற்றும் தவறுதலான அழைப்பின் மூலம் உருவாகும் உறவின் பின்னணி இவ்வாறான தொடர்புகள் ஏற்பட வழிவகுக்கின்றது. சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கு செல்கின்ற போதும், பொது இடங்களில் முஸ்லிம் சிங்களவர்கள் தொடர்பு அதிகரிக்கும் போதும் ஏற்படும் சிநேகம் திருமணத்திற்கு ஏதுவாகிறது. பெற்றோர்கள் வெளிநாடு செல்வதன் மூலம் பிள்ளைகளுக்கான பாதுகாப்பு குறைகின்ற நிலையில் பிள்ளைகள் தமக்கேற்ற துணையை தெரிவு செய்கின்ற சுதந்திரத்தை தாமே எடுத்துக் கொள்ளும் நிலை உருவாகின்றது. அதே சமயம் பெற்றோர்கள் கலப்பு திருமணம் செய்து கொண்டமையினால் பிள்ளைகளுக்கும் அத்திருமணத்தில் பெற்றோர்கள் சார்பில் துணைத்தேர்வில் பராமுக தன்மையையும் அவதானிக்க முடிகின்றது.

இரண்டாம் தாரமாக கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களில் ஆண்களை விட பெண்கள் (7 பேர்) அதிகமானவர்கள். இக்கலப்பு திருமணம் செய்வதற்கு உந்துதலாக மூத்த தாரமாக முஸ்லிம் ஆண்களை திருமணம் செய்து விவாகரத்து பெற்ற பின்னர் பாடசாலை நண்பர்கள், முறையற்ற தொடர்புகள் கொண்ட சிநேகபூர்வமானவர்களை இரண்டாம் தாரமாக முஸ்லிம் அல்லாதவர்களை திருமணம் செய்கின்றனர். மூத்த தாரமாக முஸ்லிம் ஆண்களை பஸ்கு செய்து விட்டு முஸ்லிம் அல்லாதவர்களை திருமணம் செய்கின்றமையை அறியமுடிகின்றது. இரண்டாம் தாரமாக கலப்பு திருமணம் செய்யும் ஆண்களின் பின்னணி காரணங்களாக மூத்த மனைவி இருக்கும் போதே முறையற்ற தொடர்புகள் மூலமும், முதலாம் தாரம் தன்னை பஸ்கு (மனைவி விடுக்கும் விவாகரத்து) செய்த பின்னரும், முதலாம் தாரம் மரணித்ததன் பின் இரண்டாவது திருமணமாக மாற்று மத பெண்ணை திருமணம் செய்துள்ளனர்.

**திருமணம் இடம்பெற்ற முறை**

நாச்சியாதீவு பிரதேசத்தில் இத்திருமண நடைமுறைகள் வெவ்வேறு மதங்களின் அடிப்படையில் இடம் பெற்றுள்ளது. அதிமாக இஸ்லாமிய முறைப்படியில் திருமணம் இடம்பெற்றுள்ளது. பெண்களை விட ஆண்கள் (21 பேர்) அதிகமாக இஸ்லாமிய முறைப்படி திருமணம் இடம்பெறுவதை அவதானிக்க முடின்றது. (18 பேர்) பள்ளிவாசளிலும், (4 பேர்)

வீடுகளிலும் இத்திருமணம் நடைபெற்றுள்ளது. சில திருமணம் ( 4 பேர்) நாச்சியாதீவு பிரதேசத்திலும் ஏனைய பிரதேச பள்ளிகளிலும் நிகாஹ் இடம்பெற்றுள்ளது. ஆண்களின் துணைகள் இஸ்லாத்தை ஏற்றதன் பின் இஸ்லாமிய திருமண முறைபடி நடந்துள்ளது. இப்பிரதேச பெண்கள் (12 பேர்) இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்துள்ளனர். அவர்களில் அதிகமானவர்கள் ( 9 பேர்) பள்ளிவாசலில் நிகாஹ் இடம்பெற்றுள்ளது. பெண்களின் துணைவர்கள் மாற்று மதத்ததிலிருந்து இஸ்லாத்தினை ஏற்றதன் பின் இஸ்லாமிய முறைப்படி திருமணம் இடம்பெற்றுள்ளது. இன்னும் சில பேர் திருமணத்திற்கு முன்பு இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம் பெண்களை திருமணம் செய்துள்ளனர்.

இஸ்லாமிய முறைப்படி செய்த திருமணம் செய்தவர்களை விட ஏனைய மதங்களில் திருமணம் செய்தவர்கள் குறைவானவர்களாக இருக்கின்றனர். இவர்களில் ஆண்கள் ( 10 பேர் ) பெண்களை விட அதிகமானவர்கள் ஏனைய மத முறைப்படி திருமணம் செய்துள்ளதாக அறிய முடிகின்றது. இவர்களில் அதிகமானவர்கள் சிங்கள முறைப்படி ( 13 பேர்) திருமணம் செய்தவர்களாகவும், இந்துக்களின் முறைப்படி இருவர் திருமணம் செய்துள்ளனர். இத்திருமணம் நாச்சியாதீவு பிரதேசத்தில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்களில் சிலர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறி உள்ளனர். மாற்று மத முறைப்படி திருமணம் செய்த பெண்களை (7 பேர்) இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்த பெண்களுடன் ஒப்பிடும் போது சற்று குறைந்த எண்ணிக்கை உடையவர்களாக இருக்கின்றனர். இவர்களில் சிங்களம் மற்றும் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் இடம்பெற்றுள்ளது. இவர்கள் அனைவரும் அவர்கள் திருமணம் செய்து கொண்ட முறைப்படியே இஸ்லாத்தை விட்டு வெளியேறியுள்ளதாக அறிய முடிகின்றது.

**வலியின் முக்கியத்துவம்**

இஸ்லாமிய முறைப்படி ஒரு திருமணம் செல்லுபடியாவதற்கு வலி ( திருமணப் பாதுகாவலர்) அவசியமாகிறது. இருப்பினும் திருமணப் பாதுகாவலர், உறவினர்கள், காழி, போன்றவர்கள் இருக்கும் சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளது. வலி ( திருமணப் பாதுகாவலர் ) இல்லாதும் திருமணம் இடம்பெற்றுள்ளது. வலியாக உறவினர்கள் இடபெற்றுள்ளவற்றில் பெண்கள் ( 6) தந்தை மற்றும் சகோதரர் வலியாக இருந்துள்ளதாக அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு இடம்பெற்ற திருமணத்தில் குறிப்பிட்ட சிலரே பெற்றோர்களின் விருப்பத்தில் இடம்பெற்றுள்ளது. ஆண்களில் குறிப்பிட்ட துணையின் சிலருக்கு ( 2 பேர் ) உறவினர்கள் வலியாக செயற்பட்டுள்ளனர். காரணம் அவர்களது பெற்றோர்கள் திருமணத்திற்கு முன் இஸ்லாத்தினை ஏற்றுகொண்டவர்களாக இருப்பதனால் மகளுக்கு வலியாக இருந்துள்ளதாக அவதானிக்க முடிகின்றது.

பெண்களை விட ஆண்கள் திருமணம் செய்த துணைகளுக்கு அதிகமாக (19 பேர்) காழி திருமணத்தின் வலியாக இருந்துள்ளார். காரணம், ஆண்கள் திருமணம் செய்து கொண்ட அனைத்து துணையின் வலியாக ( தந்தை, உறவினர்கள் ) முஸ்லிம் அல்லாதவர்களாக இருக்கின்றமையினால் வலியாக செயற்பட முடியாத சூழ்நிலை

காரணமாக காழி வலியாக இருந்துள்ளனர். இதே போன்று பெண்களுக்கு வலியாக காழி இருந்துள்ளமையும் அவதானிக்க முடிகின்றது. காரணம் பெண்கள் கலப்பு திருமணம் செய்வதற்கு பிரதேசம் விட்டு பிரதேசம் சென்று திருமணம் செய்கின்ற சந்தர்ப்பத்திலும், பெற்றோர்கள் வலியாக இருப்பதற்கு மறுக்கின்ற போதும் வலியாக காழி செயற்படுகின்றார். பொதுவாக இஸ்லாமிய திருமண முறைப்படி திருமணம் செய்யாது மதம் மாறி திருமணம் செய்யும் அனைத்து திருமணங்களுக்கும் வலி இன்றிய திருமணமாக அவதானிக்க முடிகின்றது. அவற்றில் பெண்களை விட ஆண்கள் அதிகமானவர்களாக (10 பேர்) காணப்படுகின்றனர்.

**முடிவுரை**

கலப்பு திருமணம் சமூகத்திலும், குடும்பத்திலும் விமர்சனங்களுக்குட்பட்டாலும், முஸ்லிம் குடும்பங்களில் நெடுநாட்தொட்டு இடம்பெறுகின்றது. இஸ்லாமிய கணவன்-மனைவி தேர்வில் சில பொடுபோக்கு தன்மையை அவதானிக்க முடிகின்றதோடு, திருமணத்தின் வலியின் முக்கியத்துவத்தை அறியாத நிலையையும் கொண்டுள்ளனர். முஸ்லிம்களை திருமணம் செய்யும் அதே கண்ணோட்டத்தில் முஸ்லிம் அல்லாதவர்களை திருமணம் செய்வதில் பெண்களின் மனநிலை காணப்படுகிறது. பெண்களின் விருப்பில் திருமணம் இடம்பெறுவது ஷரியா முக்கியத்துவம் வழங்கியிருந்தாலும் கலப்பு திருமணத்திற்கான முழுமையான சட்டத்தை பெண்கள் அறியாது உள்ளனர். இளந்தலைமுறையினருக்கு இஸ்லாமிய சட்டங்கள் பற்றிய தெளிவின்மையினால் இளைஞர்களுக்கு இது பற்றிய விளிப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பாரதூரத்தை உணர்த்த வேண்டும். இஸ்லாத்தை ஏற்க முன் இஸ்லாத்தைப் பற்றிய தெளிவு, அதன் அடிப்படைக் கோட்பாடுகள், தனது கடமைகள், அறிந்து கொள்வது பொருத்தமானதேயாகும். அதற்குரிய ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க வேண்டும். ஆணோ, பெண்ணோ இஸ்லாத்தில் இணைகின்றபோது, அவர்கள் முழுமையாகவே தமது சமுகம், குடும்பம், உறவுகளைத் துறந்து வருகின்றனர். எனவே இவர்கள் வரும் குடும்பங்களில் இவர்களை அரவணைக்க வேண்டும். இத்தகைய கலப்புத்திருமணங்கள் பெரும்பாலும் இரகசியத் திருமணங்களாகவே நடைபெறுகின்றன. இதற்கு காழிகளும், உலமாக்களதும், திருமணப் பதிவாளர்களும் ஒத்துழைப்பு காரணமாக அமைகிறது. இதனால், இத்தகைய வாலிபர்களும், யுவதிகளும் தாம் பெரும் தவறுகளைச் செய்துவிட்டு திருமணம் செய்து கொள்கின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்படும் காழிகள், உலமாக்கள் இஸ்லாமிய சட்டத்தை பிரயோகிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இஸ்லாமிய திருமணம் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குமுறைகளை அனைத்து முஸ்லிம் சமூகம் அறிந்திருக்க வேண்டும் அப்போதுதான் இஸ்லாத்திற்கு முரணான திருமண சம்பிரதாயங்கள் இஸ்லாமிய ஷரீஆ திருமணத்துடன் கலக்காமல் பாதுகாக்க முடியும்.

## REFERENCE

முஜீப் சாஹிப். (2014). குடும்ப வாழ்க்கைக்கு குறித்து இஸ்லாம் கூறும் போதனைகள். Retrieved (2019.10.6) From http; //w.w.w.tamilmurabbi.blogspot.com

ரியால், எம். (2012.2.18). நவீன இஸ்லாமிய குடும்பம் எதிர்கொள்ளும் சவால்கள். Retrieved (2019.10.4) From;http;//w.w.w.kalvivali. blogspot. com

Jones, W, heng, l. & maznah, M. (2009). *Muslim non-muslim marriage* . (Rev. ed.). Retrieved from:http://www.muse.jhu.edu

Mohammad, I. J. & Lehmann, C.(2011, June 5). *women's rights in Islam regarding marriage and divorce. journal of law and practice. iv(1)* p. 1 - 13 Retrieved from:http://www.open.mitchellhamline.edu

Rahman, A. (2013, March 14). *the importance of marriage in Islam*. Retrieved from importance Mubarak, A . (1998).islam on marital rights. Ohio : Islam international publication. marriage in Islam:http://islam.ru/en

Hafeez abdali, A.(2013, May 7). *mixed marriage enriches the human experience despite its difficulties.* Retrieved from swi:http://www.swissinfo.ch

Government, (2014, November 15). a guide to marriage. Retrieved from rights of women:http://www.rightsofwomen.org.uk

Huzain meraj, I. (2018, April 30). *requirements for an Islamic marriage contract – learn* religions. Retrieved from learnreligions:http://www.learnreligions.com

Kennady, A. (2019, February 22). *mixed marriage exclusions in the name of religion*. Retrieved from assabah:http://assabah.ma

Law.gov,k.(2019,August).interfaith prohibition Retrieved from law.gov:http://www.loc.gov